ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

12.06.2025

1. வேலவா ஞானத் தலைவா
வெற்றிமுகம் காட்டி உலகினில்
காலமதை உனை வேண்டுபவர்க்கு
காரியசித்தி ஆக்கும் முருகா

2. முருகா அரங்கனும் உமை போற்றி
முழுமைதனை உலகோர் அடைய
குருவார அருளாசியாக அரங்கனும்
கூறிடுவேன் விசுவாவசு விடை திங்கள்

3. திங்களில் பஞ்ச குருவார ஆசிதனை
தொண்டர்கள் சிறக்கவும் உரைப்பேன்
ஓங்கார ஞான மகா சபையாக
ஓங்கார குடிலை படைத்திருக்க

4. இருக்கவே கலியுக மக்களும்
இனிதே தேடி வருகை தந்து
கருத்தாக சோதி வழிபாட்டை
கந்தா அரங்கா என போற்றி

5. போற்றியே முழு சரணாகதியை
புண்ணிய வழிதனில் செய்து
மாற்றம் தரும் சைவ நெறியை
மனமுவந்து ஏற்றுத் தொடர்ந்து

6. தொடர்ந்துமே பிரணவக் குடிலின்
தொடர் அன்னதானம் தனில்
தடையற பொருளுதவி செய்து
தானும் தருமவானே எனும்

7. எனும் தனி அடையாளம் கூட்டி
என் ஆசிதனை ஏற்க
ஞானமோடு தருமபலம் கூடி
நன்மைதரும் பலன்களாக மாறி

8. மாறியே வாழ்வில் தேடும் முன்
மாற்றங்கள் வரங்களாகவே
ஆறுமுக அரங்கனென் தயவால்
அனைவருக்கும் சித்தி கிட்டும்

9. கிட்டவே உலக மாந்தர்களுள்
குருவரங்கன் ஆசி கண்டவர்கள்
கட்டங்கள் கருமவினை வென்று
கண்டுரைப்பேன் தன்னோடு மற்றவர்க்கும்

10. மற்றவர்க்கும் ஞானம் அருளும்
மகான்களாகவே தேறிடுவர்
ஏற்றம் பல புவியில் நடத்தும்
இணையில்லா சக்திமிக்கவர்களாக

11. ஆகவே உலக மாற்றம் தரும்
ஆன்மீக அரசியல் களமும்
வகைபட கொண்டவர்களாகவே
வருங்காலம் மாற்றம் புரிவர்
குருவரங்கன் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி